# ஆற்றுகையாகக் கவிதைகளின் வெளிப்பாட்டு உத்திகள்: யாழ்ப்பாண அரங்கக் கவிதைகளை மையமாகக் கொண்ட ஆய்வு

சந்திரகுமாரி பாலச்சந்திரன்*

**ஆய்வுச் சுருக்கம்**

'கவிதை' காலம் காலமாகத் தமிழுக்கு அழகு சேர்த்து வருகின்ற ஒரு இலக்கிய வடிவம். ஓர் அனுபவத்தின் கற்பனை உணர்வைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள், ஒலிக்குறிப்பு ஆற்றல் ஆகியவற்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி வெளிப்பாட்டைத் தோற்றுவிக்கக் கவிதை முயல்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றுப் புலத்தின் தொடக்கமாகத் திகழும் சங்கக் கவிதைகள் உட்பட யாப்பிலக்கண மரபுக்குள் கட்டுப்பட்டு, ஓசை ஒழுங்கும், சொற்சொட்டும் கொண்டு, நெகிழ்வுத் தன்மை அற்றதாக மரபுக்கவிதைகள் பாடப்பட்டன. காலப்போக்கில் தமிழ்ச் சூழலுக்குள் நவீனத்துவம் கால்பதிக்கத் தொடங்கிய போது மரபும் நவீனமும் கலந்த சாயலில் கவிதைகள் எழுந்தன. பின்னர் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வசனக்கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதை, கைக்கூ எனப் பல பரிமாணங்களைப் பெற்றுக் கவிதை வெள்ளம் பாய்ந்தோடிய வண்ணமே உள்ளது. இவற்றின் ஓர் அங்கமாக ஆற்றுகைக் கவிதைகள் தோற்றம் பெற்றன. ஆற்றுகைக் கவிதைகள் அவற்றின் வெளிப்படுத்து முறையில் ஏனைய கவிதைகளிலிருந்து மாறுபட்டதாகத் திகழ்கின்றன. சாதரண கவிதைகள் எழுதுதலோடும், கட்புலனோடும் தொடர்புபட்டதாக அமைய, ஆற்றுகைக் கவிதைகள் எழுதலோடும், செவிப்புலனோடும் தொடர்புடையனவாக உள்ளன. இங்கு கவிஞர்கள் தமது கவிதைகளை அரங்கில் தாமே வாய்விட்டுச் சொல்லி வெளிப்படுத்தும் போது கவிதை ஆற்றுகையோடு தொடர்புபட்டு அமைவதைக் காணலாம். இவ்வாறான ஆற்றுகை நிகழ்வுகள் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணச் சூழலில் 1960ஆம் ஆண்டளவில் செல்வாக்குப் பெற்றது. அன்று தொட்டு, இன்று வரை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட ஆற்றுகைக் கவிதை முயற்சிகளை மையமாகக் கொண்டு இக்கட்டுரை வடிவமைக்கப்படுகின்றது. ஆய்வின் பிரதான மூலங்களாக யாழ்ப்பாணத்தில் ஆற்றுகை செய்யப்பட்டு இன்று கிடைக்கக் கூடியதாக உள்ள ஆற்றுகைக் கவிதைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. துணைநிலை மூலங்களாக யாழ்ப்பாண ஆற்றுகைக் கவிதைகள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், கவிஞர்களிடம் நேரடியாகக் கலந்துரையாடிப் பெற்றுக் கொண்ட விடயங்கள் போன்றன சேர்க்கப்பட்டுள்ளன. விபரணமுறை, பகுப்பாய்வுமுறை என்பன இவ்வாய்வின் அணுகுமுறைகளாக அமைகின்றன. ஆற்றுகைக் கவிதைகளின் இலக்கியத் தன்மை, தனித்துவங்கள் என்பவற்றை எடுத்துக்காட்ட வேண்டிய தேவையின் அடிப்படையில், ஆற்றுகைக் கவிதை தொடர்பான சரியான புரிதலை ஏற்படுத்துவது இவ் ஆய்வின் முக்கிய நோக்கமாகும். ஆற்றுகைக் கவிதைகளினுடைய இலக்கியப் பெறுமானத்தையும், அவற்றின் வளர்ச்சியினையும் தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்துடன் பொருந்தி நோக்க முனைகின்றவர்களுக்கு இவ் ஆய்வு கைவிளக்காக அமையும்.

**பிரதான சொற்கள்:** கவிதை, ஆற்றுகைக் கவிதை, வெளிப்பாட்டு முறை

To whom correspondence should be addressed: bshanra37@gmail.com

*Assistant Lecturer, Department of Tamil, University of Jaffna.